Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

THURSDAY, JUNE 19 2025

வியாழக்கிழமை 19, ஜூன் 2025 | ஒளி: 10 கதிர் 264 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



### பகிடிவதை விவகாரம்:

## BASL மனுவுக்கு திகதி குறிப்பு

பகடிவதை காரணமாக மன உளைச்சலுக்குள்ளாகி உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் (BASL) தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு எதிர்வரும் ஜூலை மாதம் 18ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உயர்நீதிமன்றம் புதன்கிழமை(18) திகதி குறித்துள்ளது.

தொடர்ச்சி P2

### அரசாங்கத்திற்கு 8 மில்லியன் ரூபாய் இழப்பு விவகாரம்:

# கெஹெலிய உள்ளிட்ட மூவருக்கும் பிணை



முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி குசும் ரம்புக்வெல்ல மற்றும் மகள் அமலி ரம்புக்வெல்ல ஆகியோர் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால், புதன்கிழமை (18) அன்று கைது செய்யப்பட்டு பின்னர்.

தொடர்ச்சி P2

## "கெட்டதைத் தடுப்பதற்குப் போராடுவதும் பொறுப்பு"

### நிதி அமைச்சின் செயலாளருக்கான சேவைக்கு பாராட்டு விழாவில் ஜனாதிபதி



நல்ல விடயங்களை உருவாக்குவதற்குப் பங்களிப்பதுடன், கெட்டதைத் தடுப்பதற்குப் போராடுவதும் அரச அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும், அந்தவகையில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன நாட்டிற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அதேபோன்று, கடந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஏற்பட்ட மாற்றத்தின் போது நாட்டின் பொருளாதாரத்தை சிறப்பாக நிர்வகிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வெற்றிக்கு அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, அதற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முஸ்லிம்களுக்கு மீண்டுமோர் அநீதி



முஸ்லிம் மக்களின் வாக்குகளை முழுமையாகப்பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசு, தனது அமைச்சரவையில் முஸ்லிம்களை முற்றாகப் புறக்கணித்து துரோகம் செய்த நிலையில் கொழும்பு மாநகர சபையை சூழ்ச்சியினால் இந்த அரசாங்கம் கைப்பற்றி முஸ்லிம் மக்களுக்கு மீண்டுமோர் அநீதியைச் செய்துள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட எம்.பி. தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) அன்று இடம்பெற்ற வெளிநாட்டுத் தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல்,

தொடர்ச்சி P2

## நுவரெலியா பிரதி மேயர் இ.தொ.கா வசமானது

**எஸ்.கணேசன், ரஞ்சித் ராஜபக்ஷ**

நுவரெலியா மாநகர சபையின் மேயர் மற்றும் பிரதி மேயரை தெரிவுசெய்வதற்கான கூட்டம் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் தலைமையில் மாநகரசபையில் புதன்கிழமை (18) அன்று நடைபெற்றது.

இதன்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் உபாலி வணிகசேகர 14 வாக்குகளைப் பெற்று முதல்வரானார்.

நுவரெலியா மாநகரசபையில் தேசிய மக்கள் சக்திக்கு 12 ஆசனங்கள் உள்ள நிலையில், இ.தொ.காவின் இரு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர். நுவரெலியா மாநகரசபையின் பிரதி மேயராக இ.தொ.கா உறுப்பினர் சிவன்ஜோதி யோகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமார் இரு தசாப்தங்களுக்கு பிறகு நுவரெலியா மாநகர சபையின் பிரதி மேயர் பதவியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுள்ளது.



## "கஷ்டத்தில் சஜித் விழ நேரிடும்"



எதிர்க்கட்சி பக்கத்தில் அதிகளவான தலைவர்களும், பண்டிதர்களும் இருப்பதாகவும் இவர்களுடன் பயணிப்பதால் எதிர்க்கட்சித் தலைவருக்கு கஷ்டத்தில் விழ நேரிடும் என்றும் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஈரான் மோதல் நிலைவரம் தொடர்பில் விவாதம் கோரி பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) அன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று போராட்டத்தில் ஈடுபட்ட போதே சபை முதல்வர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவரின் கட்சியில் அதிகளவில் தலைவர்கள் இருக்கின்றனர்.

தொடர்ச்சி P2

## அஜித் இன்மையால் சபை ஒத்திவைப்பு

ஈரான்-இஸ்ரேல் மோதல் குறித்த ஒத்திவைப்பு விவாதத்தை முன்மொழியவிருந்த பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா இல்லாததால், புதன்கிழமை (18) பாராளுமன்ற அமர்வுகள் திடீரென ஒத்திவைக்கப்பட்டன.

பாராமன்ற உறுப்பினர் நிஜாம் காரியப்பர் பிரேரணையை முன்மொழியத் தொடங்கியதை அடுத்து, ஆளும் தரப்பினர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினர் பதிலுக்கு எதிரணியினரும் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பினர்.

தொடர்ச்சி P2

## "குற்றவியல் தண்டனைகள் சட்டத்துக்குள் செல்லாது"

வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தீர்ப்புகள், கடன் வழங்கல் மற்றும் பெறுதல் பிணக்கு தொடர்பான தீர்ப்புகளை இலங்கையில் அங்கீகரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வெளிநாடுகளில் வழங்கப்படும் குற்றவியல் தொடர்பான தீர்ப்புகள் மற்றும் தண்டனைகள் இந்த சட்டத்துக்கு செல்லுபடியாகாது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### நாளுக்குநாள் தீவிரமடையும் இஸ்ரேல் தாக்குதல்:

## ஈரானில் 585 பேர் பலி; 1,326 பேர் படுகாயம்

இஸ்ரேலிய தாக்குதல்கள் காரணமாக ஈரான் முழுவதும் 585 பேர் உயிரிழந்ததாகவும், 1,326 பேர் காயமடைந்ததாகவும் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இதுவரையிலான சேதங்களே அச்சத்தை ஏற்படுத்தும் நிலையில், 6ஆவது நாளான இன்று இஸ்ரேல் தனது தாக்குதலை இன்னும் அதி தீவிரமாக்கியுள்ளது.

ஈரான் மீதான இஸ்ரேல் தாக்குதல்களால் ஈரான் முழுவதும் இதுவரை 585 பேர் உயிரிழந்ததாகவும், 1,326 பேர் காயமடைந்ததாகவும் வொஷிங்டனை மையமாக கொண்டு இயங்கும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் குழு தெரிவித்துள்ளது.

மேலும், ஈரானில் இதுவரை இறந்தவர்களில் 239 பேர் பொதுமக்கள் என்றும், 126 பேர் பாதுகாப்புப் பணியாளர்கள் என்றும் அடையாளம் கண்டுள்ளதாகக் கூறியது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

அரசாங்கத்திற்கு 8 மில்லியன் ரூபாய் இழப்பு விவகாரம்:

# கெஹெலிய உள்ளிட்ட மூவருக்கும் பிணை



பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் தனிப்பட்ட ஊழியர்கள் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் கூடுதல் நேர அடிப்படையில் அரசாங்கத்திற்கு 8 மில்லியன் ரூபாய் இழப்பை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகள் நடத்தி வரும் விசாரணைகளின் பின்னரே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கெஹெலிய ரம்புக்வெல்லவின் மனைவி மற்றும் மகள் ஆகியோர் மேற்படி ஊழல் குற்றச்சாட்டிற்கு உதவிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் மூவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# BASL மனுவுக்கு திகதி குறிப்பு

பகிடிவதை காரணமாக மன உளைச்சலுக்குள்ளாகி இருந்த சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மாணவன் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி, தன்னுயிரை மாய்த்துக்கொண்டார்.

மாணவன் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் அடிப்படை மனித உரிமைகள் மீறல் எனவும் இது தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் கோரி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த மனு எஸ். துரைராஜா, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஜனக் த சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# "கெட்டதைத் தடுப்பதற்குப் போராடுவதும் பொறுப்பு"

நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன ஓய்வுபெறுவதை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (18) முற்பகல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மனிதர்களின் உண்மையான மதிப்புகளுக்குப் பதிலாக ஏனைய விடயங்கள் மதிப்பு மிக்கவைகளாக மாறிவிட்ட இந்தக் காலகட்டத்தில், நாட்டையும் சமூகத்தையும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குத் தனிமனித மதிப்புகள் கொண்ட புதிய மதிப்பு முறையின் அவசியத்தை இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதிகப்படியான நுகர்வு மற்றும் ஊழலால் பாதிக்கப்பட்ட அரச சேவைக்குப் பதிலாக, மனிதாபிமானத்துடனும், மற்றவர்களிடம் உணர்திறன் உடையவராகவும் தனது பொறுப்புகளை நிறைவேற்றும் அரச சேவையே நாட்டிற்கு அவசியம் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், அரச சேவை, பிரஜைகளுக்கு மேலால் உள்ள மற்றும் மக்களுடன் தொடர்பில்லாத ஒரு பொறிமுறையாக இருக்கக் கூடாது என்பதுடன், தீர்மானங்களை எடுக்கும்போது, அத்தீர்மானங்கள் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து எப்போதும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதிக அனுபவமும் ஆழமான புரிதலும் கொண்ட சிரேஷ்ட அரச அதிகாரியான மஹிந்த சிறிவர்தனவின் தொழில் வாழ்க்கையிலிருந்து இளம் அரச அதிகாரிகள் பல முன்மாதிரிகளைக் கற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய மஹிந்த சிறிவர்தன, நிதியமைச்சின் செயலாளராகத் தனது 03 வருட சேவையானது தனது தொழில் வாழ்க்கையில் மிகவும் தனித்துவமான தருணம் என குறிப்பிட்டார்.

நாட்டின் ஆட்சியில் மாற்றம் ஏற்பட்ட போதிலும் தம்மீது நம்பிக்கை வைத்து, தொடர்ந்தும் அந்தப் பதவியில் சேவையாற்ற தனக்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த அவர், தனது பதவியில் கடமையாற்றும் போது ஜனாதிபதியிடமிருந்து கிடைத்த ஆதரவு தனக்குப் பெரும் பலமாக அமைந்தது என்றும் தெரிவித்தார்.

அதேபோல், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் நம்பிக்கை, சகிப்புத்தன்மை மற்றும் எல்லையற்ற அர்ப்பணிப்பு இன்றி, நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டிருக்க முடியாது என்றும் மஹிந்த சிறிவர்தன மேலும் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவின் சிறந்த சேவையைப் பாராட்டி ஜனாதிபதி அவருக்கு நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கினார்.

# முஸ்லிம்களுக்கு மீண்டுமோர் அநீதி

பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த ஆட்சியாளர்களின் விளையாட்டை இந்த அரசாங்கம் மெல்ல மெல்ல ஆரம்பித்துள்ளது. மேல் நீதிமன்றத்தின் முன்னாள் தலைவர் பந்துல கருணாரத்னவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல குறிப்பிட்டார். ஆனால் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அந்த கருத்து முழுமையாக மறக்கடிக்கப்பட்டு நீதியரசர் பந்துல கருணாரத்னவுக்கு முழுமையான ஒய்வூதிய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்றத்தின் பதில் தலைவராக நீதியரசர் மொஹமட் லபார் நியமிக்கப்பட்டார். 2024 டிசெம்பர் மாதமளவில் உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு 15 வெற்றிடங்கள் காணப்பட்ட நிலையில் மொஹமட் லபாரை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கும் இயலுமை காணப்பட்டது. இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை (13) அன்று அரசியலமைப்பு பேரவை கூடியது. இதன்போது, உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு

> முஸ்லிம் மக்களின் வாக்குகளை முழுமையாகப்பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசு தனது அமைச்சரவையில் முஸ்லிம்களை முற்றாகப் புறக்கணித்து துரோகம் செய்த நிலையில், கொழும்பு மாநகர சபையை சூழ்ச்சியினால் இந்த அரசாங்கம் கைப்பற்றி முஸ்லிம் மக்களுக்கு மீண்டுமொரு அநீதியைச் செய்துள்ளது

மொஹமட் லபாரின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார். ஆனால், இந்த பரிந்துரையை சபை முதல்வரான பிமல் ரத்நாயக்க மீளப் பெற்றுக்கொண்டுள்ளார். உயர் நீதிமன்ற நீதியரசராக மொஹமட் லபாரின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்த போது ஏன் அந்த பரிந்துரை மீளப்பெறப்பட்டது?

மேல் நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் புதன்கிழமை (18) அன்று சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். ஒரு நாள் பதவியில் இருப்பதற்காகவாவது அவரை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமித்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் இந்த செயற்பாடு வெறுக்கத்தக்கது.

இந்த அரசாங்கம் முஸ்லிம் சமூகத்துக்கு பாரியதொரு அநீதி இழைத்துள்ளது.

முஸ்லிம் மக்களின் வாக்குகளை முழுமையாகப்பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசு தனது அமைச்சரவையில் முஸ்லிம்களை முற்றாகப் புறக்கணித்து துரோகம் செய்த நிலையில், கொழும்பு மாநகர சபையை சூழ்ச்சியினால் இந்த அரசாங்கம் கைப்பற்றி முஸ்லிம் மக்களுக்கு மீண்டுமொரு அநீதியைச் செய்துள்ளது என்றார்.



# அஜித் இன்மையால் சபை ஒத்திவைப்பு

ஒரு உறுப்பினர் சார்பாக மற்றொரு உறுப்பினர் ஒரு தீர்மானத்தை முன்மொழிய முடியாது என்று அபைத் தலைவர் பிமல் ரத்நாயக்கவும் அமைச்சர் விஜித ஹேர்த்தும் சுட்டிக்காட்டினர்.

சபைக்கு தலைமைத் தாங்கிக் கொண்டிருந்த பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி சபையை, வியாழக்கிழமை (19) காலை 9.30 வரை ஒத்திவைத்தார்.

# "கஷ்டத்தில் சஜித் விழ நேரிடும்"

நீங்கள் எதனையாவது கூறினால் அவற்றைத் தூக்கிச் செல்ல உதவியாளர்கள் பலரை உருவாக்க வேண்டாம். நிலையியல் கட்டளைக்குள்ளேயே எல்லாமே நடக்கின்றன. ஆனால் சில பண்டிதர்கள் இருக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் இந்த பண்டிதர்களுடன் சென்று கஷ்டத்தில் விழ நேரிடும். எதாவது பிரச்சினையென்றால் எல்லோரும் கதைக்கத் தேவையில்லை. எதிர்க்கட்சித் தலைவர் கதைக்கலாம். அத்துடன் எதிர்க்கட்சி பிரதம கொரடாவுக்கு கதைக்கலாம். ஆனால் மற்றையவர்களும் கதைக்கின்றனர். ஆனால், நாங்க் அவ்வாறு இல்லை என்றார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி தயாசிறி ஜயசேகர கூறுகையில், இங்கே 12 கட்சிகள் இருப்பதால் 12 தலைவர்கள் இருக்கின்றனர். இது தனி அரசியல் கட்சியல்ல. இங்கே பல கட்சிகள் உள்ளன என்பதனை புரிந்துகொள்ளுங்கள் என்றார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் கூறுகையில், பண்டிதர்களுடன் நான் பணியாற்றுவது தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றேன். செயற்பாடுகளில் கீழ் நிலையில் இருப்பவர்களுடன் அன்றி பண்டிதர்களுடனேயே நான் இருக்கின்றேன் என்றார்.

# "குற்றவியல் தண்டனைகள் சட்டத்துக்குள்...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(18) இடம்பெற்ற வெளிநாட்டுத் தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெளிநாட்டு தீர்ப்புக்களைப் பரஸ்பரம் அங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்தல் தொடர்பான சட்டம் இயற்றப்பட்டது. இருப்பினும், இந்த சட்டம் முறையாக செயற்படுத்துவதற்குரிய கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவில்லை. எந்தெந்த நாடுகள், வழங்கப்படும் தீர்ப்புக்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் கடன் வழங்குநர் மற்றும் கடன் பெறுநருக்கு இடையிலான பிணக்குகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. வழங்கப்படும் விவாகரத்து தொடர்பான தீர்ப்பினை இந்த நாட்டில் அமுல்படுத்துவதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. நிபந்தனைகளின் அடிப்படையில் இதன் செல்லுபடித்தன்மை ஏற்றுக்கொள்ளப்படும்.

அதேவேளை, வெளிநாடுகளில் வழங்கப்படும் குற்றவியல் தொடர்பான தீர்ப்புகள் மற்றும் தண்டனைகள் இந்த சட்டத்துக்கு செல்லுபடியாகாது, வெளிநாடுகளில் வழங்கப்படும் விவாகரத்து தொடர்பான தீர்ப்புகள் மற்றும் கடன் வழங்கல் மற்றும் பெறுதல் தொடர்பான முரண்பாடுகளுக்கான தீர்ப்புகள் மாத்திரமே இந்த சட்டத்துக்கு ஏற்புடையதாக அமையும். இந்த சட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஏற்றக்கொள்ளப்பட்ட நாடுகளின் பெயர்களை உள்ளடக்கிய வகையில் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படவில்லை.

எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களுக்கு அமைவாக நான் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டேன். அதற்கமைவாக இந்த சட்டத்துக்குரிய ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டளைகளை உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். 53 நாடுகளை உள்ளடக்கியதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

# ஈரானில் 585 பேர் பலி; 1,326 பேர் படுகாயம்

இஸ்ரேல்-ஈரான் மோதல் 6ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், ஈரான் மீதான தாக்குதலை இஸ்ரேல் மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

புதன்கிழமை (18) காலை ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது தொடர் தாக்குதல்களை இஸ்ரேல் நிகழ்த்தியது. இச்சூழலில் ட்ரம்ப் மிரட்டலைத் தொடர்ந்து, இஸ்ரேலுக்கு அமெரிக்கா போர் விமானங்களை அனுப்பியுள்ளதால் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

புதன்கிழமை(18) காலை, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் குடியிருப்புப் பகுதிகளில் தாக்குதல் நடத்தியதோடு, ஈரானிய இராணுவ உபகரணங்கள் உற்பத்தி ஆலைகளைக் குறிவைத்தும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த சில மணி நேரங்களில் மட்டுமே ஈரானில் 50க்கும் மேற்பட்ட போர் விமானங்கள் மூலம் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இன்றைய அதிரடி தாக்குதல், ஈரானின் ஏவுகணை தயாரிப்பை முறியடிக்கவும், அணு ஆயுத தயாரிப்பு கட்டமைப்புகளை சிதைக்கவும் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தரப்பு விளக்கமளித்துள்ளது.







# சேவை பாராட்டு வைபவம்

நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன ஓய்வுபெறுவதை முன்னிட்டு ஜனாதிபதி அலுவலகத்தில் சேவை பாராட்டு வைபவம் புதன்கிழமை (18) அன்று இடம்பெற்றது.








## கட்டு பொல் தொடர்பில்

# இரு தரப்பும் ஆராய்வு

■ இருதரப்பும் ஆராய்வு

இலங்கையின் பெருந்தோட்ட விவசாய மற்றும் தெங்கு உற்பத்திகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் பத்தரமுல்லையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்றது.

இலங்கைக்கான இந்தோனேசியா உயர் தூதரகத்தின் தூதுவர் தேவீ கெஸ்டினா டெப்பிங் மற்றும் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்தன பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்தரகீர்த்தி அமைச்சின் இணைப்புச் செயலாளர் சிவனேசன் ஆகியோருக்கு இடையிலேயே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கையின் பெருந்தோட்ட விவசாயத் துறையில் காணப்படுகின்ற



வளர்ச்சி விசேடமாகத் தெங்கு, நெல் , சோளம், உற்பத்திகளில் இரு நாடுகளுக்கு இடையிலான அனுபவங்கள் மற்றும் ஒத்துழைப்புகள் தொடர்பாகவும் இலங்கையில் ஏற்றுமதி பயிர்களில் ஒன்றுதான் தெங்கு இருப்பினும் எமது நாட்டின் தற்போது தெங்கு உற்பத்தியானது அன்றாட தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது

எமது புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் நாம் தீர்மானித்துள்ளோம் எதிர்காலத்தில் உற்பத்தியினை அதிகரித்து ஏற்றுமதியினை மேற்கொள்வதற்கும்.

தற்போது இலங்கையின் வருடத்திற்கு 3,000 மில்லியன் தெங்குகளின் தேவைப்பாடுகள் உள்ள போதிலும் கடந்த வருடம் உற்பத்தியானது 2,750 மில்லியன் மாத்திரமே, 2030ஆம் ஆண்டளவில் 4,200 மில்லியன்கள் தேங்காய்கள் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளுக்கான ஓர் முன் ஆயத்தமே இவ்கலந்துரையாடல் என அமைச்சர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

அத்தோடு, தெங்கு உற்பத்தியில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல், அதனோடு இணைந்த இதர உற்பத்திகளை விருத்தி செய்தல் தொடர்பாகவும் இரசாயன உரங்கள் மற்றும் சேதன பசளைகள் மூலம் எவ்வாறான பயன்களைப் பெற்றுக்கொள்வது, சோளம் மற்றும் நெல் உற்பத்திகளில் எவ்வாறு தன்னிறைவை அடைவது தொடர்பாகத் தூதுவரும் அமைச்சர்களும் விரிவாகக் கலந்துரையாடினார்கள்.

தற்போது இலங்கையின் தெங்கு உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்களுக்கு இந்தோனேசியாவில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இலங்கையின் கட்டு பொல் (பாம் ஒயில்) உற்பத்தி தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அதன் நன்மை தீமைகள் குறித்தும் ஆராயப்பட்டதுடன், விசேடமாக ஜனாதிபதி அவர்களை இந்தோனேசியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு தூதுவர் தேவீ கெஸ்டினா டொபிங் அழைப்பும் விடுத்திருந்தார்.

## பேருந்தில் பாலியல் சேஷ்டை:

# இராணுவ சிப்பாய் கைது

■ ஹொசேரியன் லெம்பேட்

மன்னார், மடு பிரதேசத்தில் புதன்கிழமை (18) காலை அரச பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவியிடம் பாலியல் சேஷ்டை புரிந்த இராணுவ சிப்பாய் ஒருவரை முருங்கன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மாணவி மடு பிரதேசத்தில் இருந்து அரச பேருந்தில் பாடசாலைக்கு பயணித்துக் கொண்டிருந்த நிலையில், குறித்த பேருந்தில் பயணித்த இராணுவ சிப்பாய் குறித்த மாணவியிடம் சேஷ்டை புரிந்துள்ளார்.


இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவி, முருங்கன் பொலிஸ்



நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்பேரில், முருங்கன் பொலிஸார் இராணுவ சிப்பாயை கைது செய்துள்ளதுடன், இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரம் முறிந்து விழுந்ததில் கார் சேதம்



■ செ.தி.பெருமாள்

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதி செனன் பகுதியில் இருந்த மரமொன்று கார் ஒன்றின் மீது முறிந்து விழுந்ததில் காருக்கு பலத்த சேதம் ஏற்பட்ட சம்பவம் செவ்வாய்க்கிழமை (17) இரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, காரில் பயணம் செய்தவர்கள் எவ்வித காயமும் இன்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதுடன் இதனால் சுமார் ஒரு மணித்தியாலம் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த ஹட்டன் பொலிஸார், மரத்தை வெட்டி அகற்றி போக்குவரத்தைச் சீர் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். இளைஞர்களின் சுற்றுலாப் பயணம்

■ பு.கஜிந்தன்

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிக்க செய்யும் நோக்குடன் செவ்வாய்க்கிழமை (17) அன்று மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணம்-நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து சுற்றுலாப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அலன்ரீன், கஜந்தன், ஜெரின் என்ற மூன்று இளைஞர்களே இவ்வாறு நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் இவ்வாறு சுற்றுலா பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சுற்றுலாப் பணயமானது 120 நாட்கள் கொண்டதாக அமைந்துள்ளதுடன், குறித்த இளைஞர்கள் 25 மாவட்டங்களுக்கும் சென்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள

**“ வேன் ஒன்றை வீடாக மாற்றி, அந்த வேனில் வீடு ஒன்றில் உள்ள அத்தியாவசியமான தேவைகளை உள்ளடக்கி இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டது**

பிரசித்தி பெற்ற இடங்களை இனங்காட்டவுள்ளனர்.

தற்போது பொலுத்தீன் பாவனை மூலமாக சுற்றுப்புறச் சூழலானது மாசடைந்து வருகின்றது. அதனைத் தடுப்பதற்கு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாகவும் இந்த பயணம் ஆரம்பிக்கப்பட்டது.

வேன் ஒன்றை வீடாக மாற்றி, அந்த வேனில் வீடு ஒன்றில் உள்ள அத்தியாவசியமான தேவைகளை உள்ளடக்கி இந்தப் பயணம் ஆரம்பிக்கப்பட்டது.

# பல வசதிகளுடன் புனரமைக்கப்படும் நிலாவெளி

■ அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா மையமாகவும் அதிகளவான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகின்ற பகுதியாகவும் காணப்படுகின்ற குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட நிலாவெளி கடற்கரை பிரதேசத்தை வசதிகளுடன் கூடிய கடற்கரைப் பகுதியாக அபிவிருத்தி செய்வது தொடர்பான கள ஆய்வு செவ்வாய்க்கிழமை (17) மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கள ஆய்வில் குச்சவெளி பிரதேச செயலாளர், குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், கரையோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

இந்த கடற்கரை பல வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு எதிர்காலத்தில் குச்சவெளி பிரதேச சபையின் கீழ் பராமரிப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முழு உலகத்தின் அழிவின் தொடக்கமாக போர் இருக்கும்

"போரில் முதலில் இழப்பது மனிதநேயம்" என்று ஒரு பழமொழி உண்டு. எனவே, எந்த சூழ்நிலையிலும் அல்லது எந்த காரணத்திற்காகவும் நடத்தப்படும் போரை எந்த மனிதநேய வாதியும் அங்கீகரிக்க முடியாது. போர் காட்டுமிராண்டித்தனமானது. கொடூரமானது. போரின் வரலாறு இரத்தத்தில் எழுதப்பட்டுள்ளது.

மனித வரலாறு முழுவதும், அத்தகைய இரத்தத்தில் எழுதப்பட்ட ஒரு போர் வரலாறு இருந்துள்ளது. உலகப் போர்கள், நாடுகளுக்கு இடையேயான போர்கள், ஒரே நாட்டிற்குள் போர்கள் மற்றும் வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையேயான போர்கள் நடந்துள்ளன. அந்தப் போர் வரலாற்றில் வெற்றிகள் எந்த சூழ்நிலையில் அடையப்பட்டன என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இன்று பெரும் சமூக கவனத்தை ஈர்த்துள்ள சர்வதேச நிகழ்வு ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான இராணுவ மோதலாகும். இரு தரப்பினரும் குறிப்பிட்ட இலக்குகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதாகவும், இதன் விளைவாக ஏராளமான மனித உயிர்கள் உயிரிழந்ததாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கூடுதலாக, ரஷ்ய-உக்ரைன் போர் பற்றிய புள்ளிவிவரங்கள் மற்றும் அறிக்கைகள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன. முந்தைய ஈராக்-குவைத் போர், இஸ்ரேல்-பாலஸ்தீன நெருக்கடி, அத்தகைய போர் வரலாற்றின் சமீபத்திய எடுத்துக்காட்டுகள்.

இந்தப் போர்ச் செய்திகளுடன் சர்வதேச ஊடகங்கள் வெளியிட்ட புகைப்படங்களில், போரினால் பாதிக்கப்பட்டு இறந்த சிறு குழந்தைகளின் புகைப்படங்களும் இருந்தன. அவர்கள் அழுது புலம்பி இந்தப் போரை நிறுத்துமாறு கோரினர். போருடன் எந்த தொடர்பும் இல்லாத சிறு குழந்தைகள் ஒரு சக்திவாய்ந்த தரப்பின் தேவைக்காக இறக்க நேரிடுவது பரிதாபம்.

போர் என்பது பெரிய அளவில் ஒரு கடுமையான மனித மோதலாகும். இந்தப் போர் வரலாறு முழுவதும் பழங்குடி மோதல்களிலிருந்து நகரங்கள், மாநிலங்கள் மற்றும் பேரரசுகளுக்கு இடையிலான போர்களாக வளர்ந்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, மூன்றாம் உலகப் போர் நடந்தால், முழு மனித சமூகமும் கற்காலத்திற்குத் திரும்பும் என்று சர்வதேச போர் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். இதற்குக் காரணம், உலகில் உள்ள அனைத்து சக்திவாய்ந்த நாடுகளும் அணுசக்தியுடன் ஆயுதம் ஏந்தியுள்ளன.

அத்தகைய போரில் அவர்களின் முக்கிய ஆயுதமான அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால், அது முழு உலகத்தின் அழிவின் தொடக்கமாக இருக்கும் என்பது அவர்களின் கருத்து.

இந்த நேரத்தில் முழு உலகமும் கேட்க வேண்டியது போர் அல்ல, அமைதி. இது நாடுகளுக்கு இடையிலான அமைதி. இது இன அமைதி. இது மத அமைதி. இது அனைத்து மக்களும் ஒன்றாக வாழக்கூடிய அமைதி. இது ஒரு வகையில் காதல் மிக்க யோசனையாக இருந்தாலும், மனித சமூகத்தின் நம்பிக்கை.

எனவே, ஐக்கிய நாடுகள் சபை தலைமையிலான சர்வதேச அமைப்புகளின் முதன்மையான கோரிக்கையும் பங்கும் சர்வதேச அமைதியைக் கட்டியெழுப்பும் செயல்முறையாக இருக்க வேண்டும். பயனற்ற போர்களைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாகும்.

எளிமையாகச் சொன்னால், போர் என்பது இன்று மனிதகுலம் எதிர்கொள்ள வேண்டிய மிகக் கடினமான, சமூகவியல் மற்றும் தார்மீகப் பிரச்சினையாகும். பல வகையான போர்கள் இருக்கலாம், எந்த சூழ்நிலையிலும் ஆயுதங்களுடன் போர் நிறுத்தப்பட வேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மரணம் வாழ்வின் முடிவு அல்ல, ஒருவர் இறந்து போனால், அவர் தொலைந்து போவதில்லை. நல்லோர் மறைந்தால் புக ழப்படுகின்றார்கள். தீயவர்களை மக்கள் திட்டுகின்றார்கள்.

மொத்தத்தில், இறந்த பின்னரும் ஆராயப்படும் நபர்களாகின்றனர். இதுதான் உண்மை நிலை. வாழ்க்கையை வெறுத்து தங்கள் இன்னுயிரைத் துறந்தால், அது வாழ்வின் முடிவு என்கின்றோம். அப்படி இறப்பவர்கள் துரதிர்ஷ்டசாலிகள்.

வாழ்க்கையை முடித்தால், அதனால் அவர் செய்த சாதனைகள் என்ன என, எத்தனை பேர் கவலைக்கு உட்படுத்துகின்றார்கள். ஒருவரின் இழப்பு அவர் சார்ந்தவர்களுக்கு வரும் பாதிப்பு கொஞ்சநஞ்சம் அல்ல! துன்பத்தை வழங்குபவர் மனசாட்சி அற்றவன்.

நீண்ட வாழ்வைக் கத்தரிக்கலாகாது. இறப்பினால் பிரச்சினைகள் தீர்வதும் இல்லை, வளரும்.

நிரந்தர வாழ்வு வாழ முடியும். உண்மையாக வாழ்பவன் உலகையே உயிர்ப்பிப்பான்.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# எழுதப்படாத விதியா அல்லது கர்மாவா?

முருகானந்தன் தவம்

இலங்கையின் ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க எந்த நேரத்தில் பதவியேற்றாரோ அரசாக தேசிய மக்கள் சக்தி எந்த நேரத்தில் அரியணை ஏறியதோ தெரியவில்லை பதவியேற்ற, அரியணை ஏறிய நாள் முதல் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் போதாத காலமாகவே உள்ளது.

அந்தளவுக்கு ஜனாதிபதியும் அரசும் சர்ச்சைகள்,குற்றச் சாட்டுக்கள், விமர்சனங்கள், கேலிகளுக்குள் சிக்கி படாதபாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஜனாதிபதியும் அரசும் கால் வைக்கும் இடமெல்லாம் கண்ணிவெடிகளாகவே உள்ளன.

தே.ம.ச. அரசு அரியணை ஏறிய நாள் முதல் கலாநிதிப் பட்டம், அரிசி, தேங்காய், குரங்கு, உப்பு, பாதாள உலகம், படுகொலைகள், சர்வாதிகாரம், இந்தியப் பிரதமரின் வருகை, ஜனாதிபதியின் இந்திய, சீன விஜயங்கள,உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வாக்கு வீழ்ச்சி, மின்சாரக் கட்டணம், வடக்கு காணி சுவீகரிப்பு, 323 சிவப்பு முத்திரை கொள்கலன்கள் விடுவிப்பு என பல சர்ச்சைகளில் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் நிலையில் இன்னும் பல சர்ச்சைகள், குற்றச்சாட்டுகள் தே.ம.ச. அரசுக்காக வரிசையில் காத்திருக்கின்றன.

ஜனாதிபதிக்கும் தே.ம.ச. அரசுக்கும் எதிரான இவ்வாறான சர்ச்சைகள், குற்றச்சாட்டுக்கள், விமர்சனங்கள், கேலிகளுக்கு ஜனாதிபதியோ அரசோ இன்றுவரை சரியான பதிலையோ தீர்வுகளையோ விளக்கங்களையோ வழங்காது இவற்றை மக்களை மறக்கடிக்கச்செய்யும் முயற்சியாகவும் இவ்வாறான சர்ச்சைகளைக் குற்றச்சாட்டுகளை, விமர்சனங்களை முன்வைக்கும் எதிர்க் கட்சிகளை அச்சுறுத்தும், அடக்கும் விதமாகவும் அரசியல் கைதுகளை அதிகரித்துள்ள நிலையில்தான் 'ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் மோசடி' என்ற கண்ணிவெடி மீது அரசு காலை வைத்துள்ளது.

தேசிய பொசன் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுகின்ற சிறைக் கைதிகள் தொடர்பிலேயே ஜனாதிபதி அனுரகுமாரவும் அவரின் தே.ம.ச. அரசும் தற்போது கடும் குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு விடுதலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட சிறை கைதிகளுக்குப் பதிலாக வேறு ஒரு கைதி விடுதலை செய்யப்பட்டதை அடுத்தே அரசுக்கு எதிரான இந்த சர்ச்சை வெடித்துள்ளது.

தேசிய பொசன் தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நாடு முழுவதும் 29 சிறைகளிலிருந்து 338 கைதிகள் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட சிறைக் கைதி ஒருவரும் இம்முறை ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டிருந்தார். 40 இலட்சம் ரூபாய் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட நிதி நிறுவனமொன்றின் அனுராதபுரம் கிளை முகாமையாளரான இவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்ட 10 நாட்களுக்குள் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இந்தக் குற்றவாளி விடுதலை செய்யப்படுவதாக சிறைச்சாலை அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தனர். அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகள், எழுத்து மூலம் நீதிமன்றத்திற்கு முன்வைத்த ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு வடமத்திய மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி லக்மாலி ஹேவாசமினால், இந்தக் குற்றவாளி இவருக்கு எதிரான வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இந்நிலையில், 2025 பொசன் தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச்.அதுல திலகரத்ன என்பவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட 10 தினங்களுக்குள் விடுவிக்கப்பட்டதாகப் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த எதிர்க்கட்சி, இந்தச் சம்பவத்தின் பின்னணியில் கடுமையான முறைகேடு இருப்பதாகக் குற்றம்சாட்டிய நிலையிலேயே "கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக" 'ஜனாதிபதி பொது மன்னிப்பு' என்ற போர்வையில் நடந்த மோசடிகள் நடந்த நாடகங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஜனாதிபதியாக அனுரகுமார பதவியேற்றுக் கொண்ட பின்னர், ஜனாதிபதி மன்னிப்பு என்ற போர்வையில் சட்டவிரோதமாக 68 கைதிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவ்வாறான நிலையில், 'ஜனாதிபதி பொது மன்னிப்பு' என்ற பெயரில் கைதி ஒருவர் மோசடியாக விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய பணி இடைநீக்கம் செய்யப்பட்டு கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டபோது, நீதிமன்றத்தில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், 2024ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தில் 57 கைதிகளும், இந்த ஆண்டு சுதந்திர தினத்தின் போது, மேலும் 11 கைதிகளும் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமல் முறைகேடாக விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பைத் தவறாகப் பயன்படுத்தி சில கைதிகளை விடுதலை செய்ததாகக் குற்றம்சாட்டி சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, அனுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சர் மோகன் கருணாரத்ன ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் தேசிய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும் ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்கான நிபந்தனைகளை, இனிவரும் காலங்களில் நீதி அமைச்சு கடுமையாக்கும் என்று நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார். அதேநேரம், கடந்த ஆட்சிகளிலும் இவ்வாறு ஜனாதிபதி பொது மன்னிப்பு தவறாகப் பயன் படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுமென அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ அறிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய பொசன் தினத்தையொட்டி, ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட 388 கைதிகளின் முழுப் பட்டியலையும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐ.ம.ச. கோரியுள்ளது. ஜனாதிபதி அனுரகுமாரவிற்கு அனுப்பப்பட்ட கைதிகளின் பரிந்துரை பட்டியல் மற்றும் அவர் அங்கீகரித்த உரிய பட்டியல் இரண்டும் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி யார் யாருக்கெல்லாம் மன்னிப்பு வழங்க அங்கீகாரம் அளித்தார் என்பதைப் பற்றி மக்களுக்குப் பதிலளிக்கும் கடமை ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

'ஜனாதிபதி பொது மன்னிப்பு' மோசடியாகப் பயன்படுத்தப்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டு சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, அனுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சர் மோகன் கருணாரத்ன ஆகியோர் கைது செய்யப்பட்டாலும், சிறைக் கைதிகள் மோசடியாக விடுவிக்கப்பட்டதன் பின்னணியில் அரசியல் இல்லாமல் இல்லை. இவ்விருவர் கைது தொடர்பிலும் அரசு காட்டிய அவசரம் அதன் பின்னால் உள்ள அரசியலை மூடி மறைக்கும் ஒரு கைங்கரியமாகவே பார்க்கப்படுகின்றது. அரசியல் அழுத்தங்கள் அல்லது அரசியல் செல்வாக்கு இல்லாமல் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை மோசடியாகப் பயன்படுத்தும் தைரியம் இலகுவில் யாருக்கும் வராது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை முறையற்ற வகையில் பயன்படுத்தி விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் அதுல திலகரத்ன என்ற நபர், குற்றப்புலனாய்வு பிரிவினரால் தேடப்படும் நிலையில், அவர் தனக்கு எதிரான வேறு வழக்கு விசாரணையொன்றுக்காகக் கடந்த புதன்கிழமை அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளமையும் அந்த நீதிமன்றத்தில் இடம்பெற்ற அனுராதபுரம் சிறைச்சாலை பணிப்பாளருக்கு எதிரான வழக்கு விசாரணையையும் பார்வையிட்டுள்ளமையும் தான் நீதிமன்றத்தில் இருக்கின்றேன் என்று தெரிவித்துள்மையும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

அவர் அனுராதபுரம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற தனக்கு எதிரான வேறு வழக்கொன்றில் தனது சட்டத்தரணியுடன் கலந்து கொண்டிருந்ததுடன், அந்த விசாரணை முடிவடைந்த பின்னர், சிறைச்சாலை பணிப்பாளருக்கு எதிரான வழக்கு விசாரணை நடைபெற்ற பகுதிக்குச் சென்று அங்குப் பார்வையாளர் பகுதியில் இருந்து வழக்கு விசாரணைகளையும் பார்வையிட்டுள்ளார். இவ்வேளையில், சிறைச்சாலை பணிப்பாளர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி நீதிமன்றத்தில் விளக்கமளித்து, இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சிறைச்சாலை பணிப்பாளர் சட்டவிரோதமான முறையில் அதுல திலகரட்னவை விடுவிக்கவில்லை என்றும், விடுதலையான நபர் இந்த நீதிமன்றத்தில் இப்போது இருக்கின்றார் என்றும் கூறியுள்ளார். அவர் சட்டப்படி விடுதலையான காரணத்தினாலேயே இங்கே இருக்கின்றார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த அதுல திலகரட்ன, தான் இங்கே இருக்கின்றேன் என்று கையுயர்த்திக் கூறியுள்ளார். இவ்வேளையில், நீதிமன்ற வளாகத்தில் குற்றப்புலனாய்வு அதிகாரிகளும் இருந்துள்ளனர். எவ்வாறாயினும், குறித்த வழக்கு விசாரணை முடிந்த பின்னர், அங்கிருந்து அதுல திலகரட்ன அங்கே தனது நண்பர்களுடன் சிறிது நேரம் கலந்துரையாடியதுடன், குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு முன்னாலேயே அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

அவர், ஜனாதிபதியின் பொது மன்னிப்பை மோசடியாகப் பயன்படுத்தி விடுதலை செய்யப்பட்டிருந்தால் ஏன் அவரை அங்கிருந்த குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்யவில்லை? அவரை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிடவில்லை. அதனால் கைது செய்யவில்லை என்றால் ஏன்? அவரை கைது செய்யுமாறு உத்தரவிடக்கோரி அரசு தரப்பு நீதிமன்றத்தை இதுவரையில் நாடவில்லை? அவர் அவ்வாறு மோசடியாக விடுதலை செய்யப்பட்டிருந்தால் எவ்வாறு இதுவரையில் தலைமறைவாகாது தைரியமாக நீதிமன்றம் வந்து தான் இங்கு தான் இருப்பதாகக் கூறியிருப்பார்? ஆகவேதான், ஜனாதிபதி பொது மன்னிப்பு என்ற விடயத்தைச் சிறை அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்துகின்றனரா? அல்லது அமைச்சர்கள் தவறாகப் பயன்படுத்துகின்றனரா? அல்லது ஜனாதிபதியே தவறாகப் பயன்படுத்திவிட்டு அதிகாரிகளை பலிக்கடாவாக்குகின்றாரா? என்ற நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது. எனினும், இதனையும் இந்த அரசு எந்த நியாயமான பதிலும் தீர்வும் வழங்காது கடந்து சென்று இன்னுமொரு சர்ச்சையில் சிக்கிக்கொள்ளும். இதுதான் தேசிய மக்கள் சக்தி அரசினதும் ஜனாதிபதியினதும் எழுதப்படாத விதி அல்லது கர்மாவாகவுள்ளது.

## கடிதங்கள்

### சிவப்பு பாலத்தை உடைத்ததால் மக்கள் அவதி

இரத்தினபுரி மாவட்டம், ஒப்பநாயக்க பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட உடவெல பகுதியில் 'வெ கங்கை' ஆற்றின் குறுக்கே உள்ள சிவப்பு பாலம் வெள்ளையர்கள் காலத்தில் அமைக்கப்பட்டது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாலம் சேதமாகியுள்ளதாகத் தெரிவித்து, அதனைப் புனரமைக்கப் போவதாகக் கூறி, கடந்த 7ஆம் திகதி பாலத்தை உடைத்து அகற்றுவதற்கு பெல்மடுல்ல நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்காலிக பாலம் ஒன்று அமைக்காமல் குறித்த பாலத்தினை உடைத்து அகற்றியதால் பாலத்தினூடாக பயணிக்கும் அக்கரெல்ல, உடகம, பரகாமடித்த, பின்னகலகந்த, வல்லகெட்டிய, ரங்வல ஆகிய பகுதிகளில் உள்ள 500கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளது..

அப்பகுதி மக்களால் வெ கங்கை ஆற்றைக் கடக்கக் குறித்த பகுதியில் தற்காலிக கம்பி பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்ததுடன், கடந்த ஒன்பதாம் திகதி அதனூடாக சிலர் பயணிக்கும் போது பாலத்தின் ஒரு கம்பி உடைந்து பாலம் தாழிறங்கியுள்ளது.

இதனால் அப்பகுதி மக்கள் மிக ஆபத்தான நிலையில், ஆற்றைக் கடந்தே பயணிக்கிறார்கள். எனவே, இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– மஹிந்த குமார்










# எல்லே கார்னிவல்

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு பவளவிழாவினை முன்னிட்டு, 2003 O/L மற்றும் 2006 A/L மாணவர் ஒன்றியம் நடாத்திய மகளிருக்கான பவளவிழா எல்லே சுற்றுப்போட்டி கடந்த இரண்டு தினங்களாகக் களைகட்டியது.

2000ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான 20 பழைய மாணவிகள் அணியினர் இவ் எல்லே சுற்றுப்போட்டி யில் இரண்டு நாட்கள் பலத்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் ஒன்றியத்தலைவர் என்.றிஷான்த் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கோலாகலமாக நடைபெற்றது.

– வி.ரி.சகாதேவராஜா









# புலம்பெயர்வு



றொசில்டா அன்டன்

“அம்மா... அம்மா...” இதை தவிர, அவன் எதையும் அறியாதவன். இந்த வயதில் அவனை நாடு கடத்துவது பாவம் தான். என்ன செய்வது நாட்டு நிலமை அப்படி. சுவிஸ் அங்கே தான் மாறனை தாய் அனுப்புவதாக திட்டம். குடும்பத்தில் மாறன் தான் முதலாவதாக விமானம் ஏறுகின்றான். வேறொரு வானம், வேறொரு நிலம் மாறனுக்கு பதினாறு வயது. அவன் கண்களில் பயமும் புரியாத துக்கமும் கவிழ்ந்திருந்தது. ஊரெங்கும் தீயின் நாக்குகள் ஆடிய கோரமான இரவுக்குப் பிறகு, அம்மா அவனை இறுக அணைத்து இரண்டு பெட்டியில் உடுப்பும் ,கொஞ்சம் பணத்தையும் கையில் திணித்தாள். “போய் வா கண்ணு. பத்திரமா இரு மாமா வருவான் வந்து கூட்டி போவான்”

என்று கண்ணீர் மல்கச் சொன்ன அந்த வார்த்தைகள் தான் அவன் தன் தாயிடமிருந்து கடைசியாகக் கேட்டது. விமானத்தில் ஏறி அந்தப் புதிய தேசத்தில் இறங்கியபோது, அவனுக்கு எதுவும் புரியவில்லை.

சுற்றிலும் பேசிய மொழிகள் அவனுக்குக் காதில் ரீங்காரமிட்டன. விளம்பரப் பலகைகளிலும், விமான நிலைய கடைகளின் பெயர்ப் பலகைகளிலும் இருந்த எழுத்துக்கள் எல்லாம் புதிர் போலிருந்தன.

தெரிந்த முகங்கள் ஒன்று கூட இல்லை. பசியும் தாகமும் வாட்டியது. எங்கே போவது, யாரிடம் கேட்பது என்று தெரியாமல் சுவிஸ் விமான நிலயத்தில் காத்திருந்தான். அம்மாவின் அண்ணா வந்து அழைத்துச் சென்றார்.

மாமா என்றாலே மாறனுக்க பயம் அவர் முறுக்கு மீசையும், கருப்பு கலராய் இருந்தார். தடித்த உடம்பு 90 கிலோவாக இருப்பார் போல,

“மாறன் இங்க வந்துட்டாய் சும்மா நாட்டில இருந்த மாதிரி சுதந்திரமாய் வாழ முடியாது கட்டாயம் நீ படிக்கனும் வீசாக்கு பதியனும். அம்மாக்கு போன் எடுத்து தாரன் கதை” என்றார்.

மாமா வேலைக்கு செல்வதால் அவனைப் பற்றி பெரியதாக அலட்டிக் கொள்ளவில்லை. பாடசாலைக்கு சென்று வந்தாலும் மொழியை கற்றுக் கொள்வதில் மிக சிரமப்பட்டான். பதினாறு வயது என்பதால் அவனால் வேலைக்கு செல்வதிலும் சிரமம் ஏற்பட்டது. காலம் மெல்ல கரைய மாமாவும் தனது குடும்ப பொறுப்பால் மாறனிடத்தில் கவனம் செலுத்த முடியவில்லை.

வீசாவும் கிடத்தவுடன் “மாவை விட்டு சென்று விடுவோம்” என்கின்ற முடிவுடன் மாறன் சுவிஸ் நாட்டிலுள்ள நண்பனிடம் போக முடிவெடுத்தான்.



“மாமா நான் தனியாக சென்று விட நினைக்கின்றேன்...” “சரி மாறன் உனக்கு தோன்றுவதைச் செய்...” மாறன் மாமா செய்த உதவியை மறக்கவில்லை. அவரை நன்றியுடன் ஆரத்தழுவி காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்று விடைப்பெற்றான். உயிர் நண்பனிடம் வந்தடைந்தான்.

நண்பனின் ஊடாக வீட்டு வேலை ஒன்றில் தன்னை இணைத்துக்கொண்டான் மாறன். அவர்களின் நாளாந்த உரையாடல்கள் மூலம் மேலும் மொழியை கற்று தன்னை விருத்தி செய்தான். இரண்டு வருடம் கடின உழைப்பின் காசுகளை வீணாக்காது சொந்தமாக ஏதும் வியாபாரம் செய்யலாம் என்று தோன்றவே நண்பன் ஆர்யாவிடம் கூறினான்.

“ஆர்யா சிறியதாக கடை செய்யலாம் என்று தோன்றுகிறது. நீ என்ன சொல்கிறாய்...’ “மச்சான் நீ விரும்பவதை செய் நான் உனக்கு எல்லாமுமாக இருப்பேன்...” என்றான் ஆர்யா.

அம்மாக்கும் இடைக்கிடையே தொலைபேசியில் நாட்டின் நிலவரத்தை கேட்டு அறிந்து கொள்வான். “ராசா இங்க எப்ப கடைகளை பூட்டுவான்கள், ஊரடங்கு சட்டம் வேற எந்த நேரத்தில் போடுவான்கள் என்றே தெரியாது நீ காசு போட்டால் தான் ராசா நாங்க இங்க நிம்மதியாக சாப்பிடலாம்...” என்பாள்.

அக்கா மூவரையும் கட்டிக் கொடுக்கனும். கடமைகள் தலைதூக்கியது. காலங்கள் வேகமாக சுழன்றது. மாறன் தாரணியை காதலித்தான். ஆனால், அவனால் தாரணியை திருமணம் செய்ய முடியவில்லை. காரணம் வீட்டின் கடமைகள்.

“தாரணி இரண்டு வருடம் பொறு கடைசி அக்காவையும் திருமணம் செய்து கொடுத்தப்பின் எங்கள் திருமணம் நடக்கும். அதுவரை எனக்காக பொறுத்து கொள்...”

“மாறன் வீட்டில அம்மாவும், அப்பாவும் அவசரப்படுத்துறாங்க உங்களுக்கும் நரை விழுந்து போச்சு யோசித்து முடிவு எடுங்க...” என்று கூறி விட்டு மாறனின் பதிலுக்காக காத்திருக்காமல் அவ்விடத்திலிருந்து சென்று விட்டாள்.

மாறன் பல யோசனைகளுக்கு மத்தியில் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்ததுமே தொலைபேசி அலறியது. அக்கா மறு முனையில் “அம்மாக்கு நெஞ்சு வலி என்று வைத்தியசாலையில் அனுமதிச்சிருக்கு நீ தான் செலவுக்கு ஏதும் பார்த்து அனுப்பனும்...” என்றதுமே! அவனால் அழுகையை கட்டுப்படுத்த முடியல.

“பதினாறு வயதில் தொடங்கிய ஓட்டம் நாற்து வயதாகியும் ஓடிக்கொண்டே இருக்கன் முடிவின்றி என்ன வாழ்க்கையோ பெற்றவளின் நிலமை கவலைக்கிடம் கடைசி அக்காவிற்கு பேசிய திருமணம் சீதனத்தால் கேள்விக்குறியாக உள்ளது...” தனக்குள்ளே அழுதவனாய் ஒரு முடிவை எடுத்தவனாய் வங்கியை நோக்கி புறப்பட்டான்.

வங்கியில் கடன் வாங்கி தனது தாயின் இருதய சத்திரசிகிச்சைக்குரிய பணத்தை கொடுத்தான். அக்காவுக்குரிய சீதனத்தை வழங்கி திருமணத்தை செய்து வைத்தான்.

தாரணியை திருமணம் செய்து சந்தோசமாய் வாழலாம் என்ற கனவு கானல் நீராகி போனது. “மாறன் நீங்க இப்ப பெரிய கடனாளி வங்கி கடனை அடைக்கவே பல வருடம் செல்லும் இப்பவே நாற்பது வயது எப்ப கடனை அடைப்பிங்க. எப்ப நாம வாழ்றது அதனால தான் வீட்டில பார்த்த வரனை செய்ய சம்மதம் சொல்லிட்டன்...”

என்றதும் தலையில் இடி விழுந்த மாதிரி கனத்த மனதுடன் உலகமே வெறுமையானது போன்ற பிரமையுடன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

யாராலும் அவன் மனதில் உள்ள காயத்தை மாற்ற முடியாது. சொந்த நாட்டை, உறவுகளை, இளமையை, சுதந்திரத்தை தொலைத்து மாறனைப் போல இன்னும் எத்தனை மாறன்கள் இருக்கிறார்களோ தெரியவில்லை.

அமெரிக்கா

ஈரான் உச்ச தலைவர் நிபந்தனையின்றி

# ‘சரணடைய வேண்டும்’

ஈரான் உச்ச தலைவர் நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என்று, அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் கூறியிருப்பதாவது,

“ஈரானின் உச்ச தலைவர் என்று அழைக்கப்படுபவர் எங்கு மறைந்திருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியும். அவர் ஒரு எளிதான இலக்கு, ஆனால் அங்குப் பாதுகாப்பாக இருக்கிறார்.

“நாங்கள் அவரை வெளியே கொண்டுவரப் போவதில்லை (கொல்லப் போவதில்லை!), குறைந்தபட்சம் இப்போதைக்கு அது நடக்காது.

ஆனால், பொதுமக்கள் மற்றும் அமெரிக்க வீரர்கள் மீது ஏவுகணைகள் வீசப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் பொறுமை குறைந்து வருகிறது. இந்த விஷயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி.

“ஈரானின் வான்வெளி எங்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்கள வந்துள்ளது. ஈரானிடம் நல்ல ஸ்கை டிராக்கர்கள் மற்றும் பிற தற்காப்பு உபகரணங்கள் ஏராளமாக இருந்தன. ஆனால், அது அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட பொருட்களுடன் ஒப்பிட முடியாது.

அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்களைவிட ஈரானின் ஆயுதங்கள் சிறப்பாக செயற்படவில்லை” என தெரிவித்துள்ளார்.

## ட்ரம்பின் “மிரட்டலுக்கு அடிபணியோம்”

ட்ரம்பின் மிரட்டலுக்கு அடிபணிய மாட்டோம் என்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு ஈரான் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமெனி கடும் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் கூறும்போது,

“போர் தொடங்கிவிட்டது. பயங்கரவாத சியோனிச ஆட்சிக்கு (இஸ்ரேல்) நாம் வலுவான பதிலடி கொடுக்க வேண்டும். சியோனிஸ்டுகளுக்கு நாங்கள் கருணை காட்ட மாட்டோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.



ஈரான்



அணு ஆயுதத்தை தயாரிக்க

# ஈரானுக்கு மட்டும் தடை

அணு ஆயுதத்தை ஈரான் தயாரிக்கவே கூடாது என்று ஜி7 நாடுகள், திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

ஜி7 மாநாடு கனடாவில் நடைபெற்ற நிலையில், அந்நாடுகளின் தலைவர்கள் கையெழுத்திட்ட கூட்டறிக்கை இறுதி நாளான செவ்வாய்க்கிழமை (17) வெளியிடப்பட்டது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், “மத்திய கிழக்கில் அமைதியும், நிலைத்தன்மையும் நிலவ ஜி7 நாடுகளின் தலைவர்கள் உறுதி பூண்டுள்ளோம். இஸ்ரேல் தன்னை தற்காத்துக் கொள்ள உரிமை உண்டு என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். இஸ்ரேல் பாதுகாப்புக்கு ஆதரவு அளிக்கிறோம்.

பொதுமக்கள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறோம். அதே நேரத்தில், பிராந்திய நிலையற்ற தன்மைக்கும், பயங்கரவாதத்துக்கும் ஈரான்தான் மூலகாரணமாக இருக்கிறது. எனவே, ஈரான் கையில் அணுகுண்டு போகக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இஸ்ரேல்-ஈரான் போர் பதற்றத்தைத் தணிக்க வேண்டும். ஈரான் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டால், காசா உட்பட மத்திய கிழக்கில் பதற்றம் தணியும்.

சர்வதேச எரிபொருள் சந்தைகளில் ஏற்படும் தாக்கத்தைத் தொடர்ந்து கண்காணிப்போம். சந்தை நிலைத்தன்மையைப் பாதுகாக்க ஒருமித்த கருத்துடைய நாடுகளுடன் இணைந்து செயற்படுவோம்” என்றும் கூறப்பட்டிருந்தது.

ஈரான்

ஈரானின் குற்றச்சாட்டு குறித்து

# ‘மெட்டா’ விளக்கம்

ஈரானின் குற்றச்சாட்டு குறித்து வாட்ஸ்அப் நிறுவனமான மெட்டா அறிக்கை ஊடாக விளக்கமளித்துள்ளது.

அதாவது, “இந்த தவறான அறிக்கைகள் மக்களுக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் எங்கள் சேவைகள் தடுக்கப்படுவதற்கு ஒரு சாக்காக இருக்கும் என்று நாங்கள் கவலைப்படுகிறோம்.

“உங்கள் துல்லியமான இருப்பிடத்தை நாங்கள் கண்காணிக்கவில்லை. யாருக்கு யார் செய்தி அனுப்புகிறார்கள் என்பதற்கான பதிவுகளை நாங்கள் வைத்திருக்கவில்லை. மேலும் மக்கள் ஒருவருக்கொருவர் அனுப்பும் தனிப்பட்ட செய்திகளை நாங்கள் கண்காணிக்கவில்லை. நாங்கள் எந்த அரசாங்கத்திற்கும் மொத்தத் தகவல்களையும் வழங்குவதில்லை” என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஈரான்

# வாட்ஸ்அப்பை நீக்குமாறு உத்தரவு

அண்மைய நாட்களில் சில உயர்மட்ட தலைவர்கள் படுகொலை மற்றும் மிகவும் துல்லிய தாக்குதல்களை எதிர்கொண்டுள்ள ஈரான், அலைபேசிகளில் இருந்து வாட்ஸ்அப் செயலியை நீக்கச் சொல்லி தனது குடிமக்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

அண்மைய நாட்களில் ஈரானில் பல உயர்மட்ட தலைவர்கள் இஸ்ரேலால் படுகொலை செய்யப்பட்டனர். அதுபோல பல முக்கிய ராணுவ, அணுசக்தி மையங்களும் இஸ்ரேலால் துல்லியமாகத் தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதல்களின் துல்லியம் ஈரானிய அரசாங்கத்தை மட்டுமல்ல, உலக நாடுகளையே திகைக்க வைத்துள்ளது.

இதனையடுத்து, வாட்ஸ்அப் உட்பட சில செயலிகள் மற்றும் அலைபேசிகளால் இருப்பிடத் தரவுகள் கசிந்ததன் அடிப்படையில் முக்கிய தலைவர்கள் குறிவைக்கப்பட்டிருக்கலாம் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

எனவே, வாட்ஸ்அப்பை தங்கள் அலைபேசிகளிலிருந்து அகற்றுமாறு தனது குடிமக்களுக்கு ஈரான் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஈரானில் அரசு தொலைக்காட்சி மக்களை தங்கள் அலைபேசிகளிலிருந்து வாட்ஸ்அப்பை நீக்குமாறு, செவ்வாய்க்கிழமை (17) அன்று அழைப்பு விடுத்தது.

இந்த செயலி இஸ்ரேலிய இராணுவத்திற்கு பயனர் தகவல்களைக் கசியவிடக்கூடும் என்று அந்த அறிவிப்பு கூறியது.

இது ஈரானில் டிஜிட்டல் தனியுரிமை மற்றும் தேசியப் பாதுகாப்பு குறித்து வளர்ந்து வரும் அச்சங்களை அதிகரித்துள்ளது.

மேகாலயா:

# மேகாலயாவில் புதிய தடை

மேகாலயாவில் தேனிலவின்போது இந்தூர் தொழிலதிபர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, தனியார் வாகனங்களை வர்த்தக நோக்கத்தில் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேகாலயாவில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி தனியார் வாகனங்களை வர்த்தக நோக்கத்தில் பயன்படுத்தவும் வாடகைக்கு விடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருசக்கர வாகனங்கள் மற்றும் 4 சக்கர வாகனங்களும் இத்தடை பொருந்தும். தடையை மீறினால் அபராதம், வாகனம் பறிமுதல் உள்ளிட்ட கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என மாநில அரசு எச்சரித்துள்ளது.







காரைதீவில் மகளிருக்கான பவளவிழா எல்லே

# 2017 ராவணா அணி சம்பியன்



வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் 75ஆவது ஆண்டு நிறைவு பவள விழாவை முன்னிட்டு 2003 சாதாரண தர மற்றும் 2006 உயர் தர மாணவர் ஒன்றியம் நடாத்திய மகளிருக்கான பவளவிழா எல்லே கொண்டாட்டத்தில் 2017 ராவணா அணி சம்பியனானது.

கடந்த வாரயிறுதியில் நடைபெற்ற 2000 முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான 20 பழைய மாணவிகள் அணியினர் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் 2019 ஸ்பார்ட்டன் அணியை வென்றே 2017 ராவணா அணி சம்பியனானது.



இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில்

# பலமான நிலையில் பங்களாதேஷ்

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் பலமான நிலையில் பங்களாதேஷ் காணப்படுகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் செவ்வாய்க்கிழமை(17) ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடும் பங்களாதேஷானது முஷ்பிக்கூர் ரஹீமின் ஆட்டமிழக்காத 159, அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோவின் 148, லிட்டன் தாஸின் ஆட்டமிழக்காத 61 ஓட்டங்களோடு நேற்று மழையால் ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது 4 விக்கெட்டுகளை இழந்து 423 ஓட்டங்களைப் பெற்றுப் பலமான நிலையில் காணப்படுகிறது.

# “அணித் தலைமை பணிச்சுமை”



பணிச்சுமை முகாமைத்துவம் காரணமாக இந்திய அணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித் தலைவராக விரும்பவில்லையெனத் தெரிவித்த ஜஸ்பிரிட் பும்ரா, இதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் அறிவித்ததாகவும் கூறியுள்ளார்.

றோஹித் ஷர்மா ஓய்வு பெற்ற பின்னர் அணித்தலைவர் பிரநிதியொருவராக பும்ராவையும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நோக்கியிருந்தது.

# இந்தியக் குழாமில் ரானா இணைப்பு

இங்கிலாந்துக்கான இந்திய ஏ அணியின் சுற்றுப்பயணத்தின் முடிவில் இங்கிலாந்தில் தங்கியிருக்குமாறு கோரப்பட்ட ஹர்ஷித் ரானா, இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான இந்தியக் குழாமில் உத்தியோகபூர்வமாக தற்போது இணைக்கப்பட்டுள்ளார்.

குழாமிலுள்ள சில வீரர்கள் உபாதைகளைக் கொண்டிருப்பதன் காரணமாகவே ரானாவை இங்கிலாந்தில் தங்கியிருக்குமாறு கோரப்பட்டிருந்தது.




கழக உலகக் கிண்ணம்:

# சமநிலையில் இன்டர்- மன்டரேரே போட்டி

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவில் புதன்கிழமை (18) நடைபெற்ற மெக்ஸிக்கோவின் மன்டரேயுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் சமப்படுத்தியது.

இன்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்டினெஸ் பெற்றதோடு, மன்டரே சார்பாகப் பெறப்பட்ட கோலை சேர்ஜியோ றாமோஸ் பெற்றிருந்தார்.



இந்நிலையில், செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற பிரேஸிலியக் கழகமான புளூமினிஸேயுடனான போட்டியை ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொரூசியா டொட்டமுண்ட் 0-0 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 19, ஜூன் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.